## வழக்கறிஞராக மட்டுமின்றி – தேர்தல் நடைமுறைகளை உடன்பிறப்புகளுக்கு வகுப்பெடுக்கும் ஆசிரியராக

# கழகத்துக்குப் பெருமை சேர்க்கும் என்.ஆர்.இளங்கோவின் பணிகளைப் போற்றுவோம்!

### இராகவி இளங்கோ – சச்சிந்தர் திருமண விழாவில்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!



**சென்னை,ஆக.30-**

**சென்னை நீலாங்கரையில், கழகத்தின் சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோவின் மகள் இராகவி இளங்கோ – சச்சிந்தர் இணையரின் திருமணத்தை, முதலமைச்சர் அவர்கள் நேற்று நடத்தி வைத்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று மணமக்களை வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``வழக்கறிஞராக மட்டுமின்றி, தேர்தல் நடைமுறைகளை உடன்பிறப்புகளுக்கு வகுப்பெடுக்கும் ஆசிரியராக கழகத்துக்குப் பெருமை சேர்க்கும் அண்ணன் இளங்கோவின் பணிகளைப் போற்றுவோம். இல்வாழ்வில் இணைகின்ற இராகவி – சச்சிந்தர் இணையர், கழகமும் – கலைஞரும் போல, முதலமைச்சர் அவர்களும் – வெற்றிகளும் போல பல்லாண்டு வாழ்க" என வாழ்த்திப் பேசினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

இந்தத் திருமண விழா அண்ணன் என்.ஆர். இளங்கோ அவர்களின் வீட்டு விழாவாக மட்டுமல்லாமல், நம் இல்லத் திருமண விழாவாக, கழகத் திருவிழாவாக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, நான் உள்ளே வந்தபோது எனக்கு ஒரு சிறிய சந்தேகமே வந்துவிட்டது. நாம் திருமண மண்டபத்துக்குத்தான் வந்திருக்கிறோமா, இல்லை பார் கவுன்சிலுக்கு வந்துவிட்டோமா என்ற சந்தேகம் வந்துவிட்டது. அந்த அளவுக்கு இங்கு சட்டத்துறையைச் சேர்ந்தவர்களும், வழக்கறிஞர்கள் பலரும் மணமக்களை வாழ்த்துவதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள்.

### கழகக் குடும்பம்

அண்ணன் என்.ஆர்.இளங்கோவைப் பற்றி, உங்களிடம் சொல்லத் தேவையில்லை. அவர் பாரம்பரியமிக்க கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர். சட்டக் கல்லூரி மாணவராக இருந்தபோதே தலைவர் கலைஞர் அவர்களாலும், நம் தலைவர் அவர்களின் கொள்கைளாலும் ஈர்க்கப்பட்டு, அரசியலில் ஈடுபடத் தொடங்கியவர்தான் அண்ணன் என்.ஆர். இளங்கோ அவர்கள்.

பொதுவாகவே, தி.மு.க.-வின் கடைக் கோடி தொண்டனிடம்கூட பேசி வெற்றி பெற முடியாது. எல்லோரும் மிகப்பெரிய பேச்சாளர்கள், சிறப்பாக வாதாடுவார்கள், அனைவரும் வழக்கறிஞர் மாதிரி பேசுவார்கள் என்ற எண்ணம் பொதுமக்களிடம் உண்டு. அண்ணன் என்.ஆர்.இளங்கோ அவர்கள் இன்றைக்கு நாட்டிலேயே மிகப்பெரிய வழக்கறிஞர். அதனால்தான் அவர் கழகத்திற்காக எப்போது நீதிமன்றப் படிக்கட்டு ஏறினாலும், வெற்றியை மட்டுமே பெற்றுத் திரும்பி வந்துகொண்டு இருக்கிறார். கழகத்திற்கோ, எந்த உடன்பிறப்புகளுக்கோ நீதிமன்றம் அல்லது சட்ட நடவடிக்கைகள் என்று ஏதாவது ஒரு பிரச்சினை வந்தால், தலைவர் அவர்கள் எப்போதுமே சொல்வது, `தயவுசெய்து என்.ஆர்.இளங்கோவிடம் ஆலோசித்து விடுங்கள்' என்றுதான் உத்தரவிடுவார்கள். அந்த அளவுக்கு தலைவரின் நம்பிக்கையையும், அன்பையும் பெற்றவர்தான் அண்ணன் என்.ஆர். இளங்கோ.

### கண்டிப்பான தலைமையாசிரியர்

நீதிமன்றத்தில் மட்டும்தான் அவர் வழக்கறிஞர். ஆனால், அண்ணா அறிவாலயத்தைப் பொறுத்தவரைக்கும் அவர் ஒரு பள்ளித் தலைமையாசிரியர் போல. கழக பூத் பொறுப்பாளர்களுக்கு எல்லாம் தேர்தல் நடைமுறைகள் பற்றி வகுப்பு எடுக்கின்ற ஒரு சிறந்த கண்டிப்பான தலைமையாசிரியர்தான் அண்ணன் என்.ஆர்.இளங்கோ அவர்கள். தேர்தலுக்கு ஒரு வருடத்துக்கு முன்பே, அண்ணனின் தேர்தல் பணிகள் தொடங்கிவிடும்.

குறிப்பாக, 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்கள்தான் இருக்கின்றன. ஆனால், அவர் இப்பொழுதே தமிழ்நாடு முழுவதும் பயணித்துக்கொண்டு இருக்கிறார். இந்தியாவின் தேர்தல் ஜனநாயகம், பீகாரில் ஏற்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் குளறுபடியால், இன்றைக்கு மிகப்பெரிய ஒரு கேலிக்கூத்தாக விளங்கிக்கொண்டு இருக்கிறது. அதுமாதிரி ஒரு முறைகேட்டை தமிழ்நாட்டில் நினைத்துக்கூட பார்க்க முடியாது என்பதற்கு அண்ணன் என்.ஆர்.இளங்கோ போன்றவர்கள் நம் கழகத்திற்கு நடத்துகின்ற பாடங்களே முக்கியக் காரணம்.

இன்றைக்கு, சிறப்புத் தீவிர திருத்தப் பட்டியல் நடவடிக்கையும், ஓட்டுத் திருட்டு குற்றச்சாட்டையும் நாடு முழுக்க மக்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இதனை நான்கு மாதங்களுக்கு முன்பே கண்டறிந்து நம்மையெல்லாம் எச்சரித்தவர்தான் அண்ணன் என்.ஆர்.இளங்கோ அவர்கள். அந்த அளவுக்கு தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள், விதிமுறைகளை எல்லாம் தன் விரல் நுனியில் வைத்துக்கொண்டு கழகத்தின் கேடயமாக விளங்குபவர்தான், அண்ணன் என்.ஆர். இளங்கோவன்.

இன்றைக்கு பல இயக்கங்கள், கட்சிகள், `வார் ரூம்', `வார் ரூம்' என்று பெருமையாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், கழகத்திற்காக 2016-ஆம் ஆண்டு தேர்தலில் நம் தலைவரின் வழிகாட்டலின் பேரில், முதன்முதலில் அறிவாலயத்தில் வார் ரூம் அமைத்தவர் அண்ணன் என்.ஆர்.இளங்கோ அவர்கள். அவருக்கே அந்தப் பெருமையும சேரும்.

ஆளுங்கட்சியாக இருக்கும்போது மட்டுமல்ல, எதிர்கட்சியாக இருந்தபோதும் கழக உடன்பிறப்புகள் மீது போடப்படுகின்ற பொய் வழக்குகளையெல்லாம் உடைத்தெறிந்தவர்தான் அண்ணன் என்.ஆர்.இளங்கோ அவர்கள். அண்ணனின் இந்தப் பணிகள் தமிழ்நாட்டுடன் சுருங்கிவிடக்கூடாது என்று, இந்த நேரத்தில் நம் தலைவர் அவரை டெல்லிக்கு மாநிலங்களவை உறுப்பினராக அனுப்பி வைத்துள்ளார்கள். நாடாளுமன்றத்தில் எப்போதெல்லாம் ஒன்றிய பா.ஜ.க. அரசு மக்கள் விரோத சட்டங்களைக் கொண்டு வர முயற்சிக்கிறதோ, அப்போதெல்லாம் நம் கலைஞரின் குரலாக, கழகத்தின் குரலாக, தலைவரின் குரலாக அங்கே அண்ணன் என்.ஆர்.இளங்கோ அவர்கள் ஒலித்துக்கொண்டு இருக்கிறார். அப்படிப்பட்ட அண்ணன் அவர்களின் இல்லத் திருமண விழாவில் பங்கேற்பதில் மிகுந்த பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

### நமக்கு ஒரு இலக்கு

இன்னும் 7 மாதங்களில் சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது. அண்ணன் என்.ஆர். இளங்கோவுக்கும், நமக்கும் நிறைய பணிகள் காத்திருக்கின்றன. நம் தலைவர் அவர்கள் நமக்கு ஒரு இலக்கு கொடுத்து இருக்கிறார். குறைந்தது, நம் தி.மு.க. தலைமையிலான அணி 200 தொகுதிகளில் வெற்றிபெற்று காட்ட வேண்டும் என்ற இலக்கைக் கொடுத்திருக்கிறார்.

ஆகவே, 2026-இல் ஏழாவது முறையாக நம் கழக அரசு ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், நம் கழகத் தலைவர் தொடர்ந்து 2-வது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டுமென்றால், நீங்கள் அனைவரும் களத்தில் இறங்கி செயல்பட வேண்டும். அந்த உறுதிமொழியை, இந்தத் திருமண விழாவில் ஏற்போம் என்று கூறிக்கொள்கிறேன்.

இந்தத் திருமண விழாவில் கலந்துகொள்வதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி. அதற்குக் காரணம், இது ஒரு காதல் திருமணம். மணமகன் மணமகளுக்கு தாலியை அணிவிக்கும்போதே இருவரும் கண்ணால் பேசிக்கொண்டார்கள். ``நான் சொன்னதை செய்து காட்டிவிட்டேன் பார்த்தாயா! என்று மணமகள் கேட்க, அதற்கு நான் நன்றாக மாட்டிக்கொண்டேன்" என்று மணமகன் சொன்னவையும் எனக்கு கேட்டன. எனவே, இது காதல் திருமணம். அவர்களுக்கு அதிக அறிவுரை கூற நான் விரும்பவில்லை.

மணமக்கள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழ வேண்டும். விட்டுக் கொடுக்க வேண்டியவைகளுக்கு விட்டுக் கொடுத்து, விட்டுக் கொடுக்கக் கூடாதவைகளுக்கு விட்டுக் கொடுக்காமல், நல்ல நண்பர்களாக வாழ வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

